செய்தி வெளியீடு எண்:519 நாள்:08.11.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழச்செய்ய பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் ஃபோர்டு குழுமத்தின் தொழில் வளர்ச்சிக்காக, பல்வேறு உதவிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. ஃபோர்டு நிறுவனம், இந்தியாவில் முதன் முதலில் தனது தொழிற்சாலையை 1996-ம் ஆண்டு ஜனவரி மாதம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலான அரசின் கீழ் ரூ. 1700 கோடி முதலீட்டுடன் காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகரில் அமைத்தது. தமிழக அரசு தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அளித்துவரும் ஆதரவிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்று (8.11.2016), தலைமைச் செயலகத்தில் ஃபோர்டு குழுமத்தின் தலைவர் திரு பில் ஃபோர்டு (Thiru Bill Ford, Global Chairman, Ford Motor Company) மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம்.சி. சம்பத் அவர்களைச் சந்தித்தார்கள்.

இச்சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விரைவில் பூரண நலம் பெற தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2016–ஆம் ஆண்டில் ஃபோர்டு குழுமத்திற்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வுக்கூடம் (Research and Development Lab) அமைக்க சோளிங்கநல்லூரில் ஏக்கர் ஒன்று ரூ.13.07 கோடி வீதம் 28 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, இந்த ஆய்வுக்கூடம் அமைக்கும் பணி 2019–ல் நிறைவு

பெறும் என்றும், அவ்வாய்வுக்கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைக்க அழைப்பு விடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பின் போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் இராம மோகன ராவ், இ.ஆ.ப., அரசு ஆலோசகர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு க. சண்முகம், இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலர் திரு ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முதன்மைச் செயலர் -II மற்றும் பொதுத் துறை முதன்மைச் செயலர், திரு சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., திரு டேவ் ஷாட்ச் (Thiru. Dave Schoch, Chief Executive Officer, Ford Motor Company), திரு. டேவ் டபன்ஸ்கி (Thiru Dave Dubensky, Managing Director, Ford Motor Company), திரு அனுராக் மல்ஹோத்ரா (Thiru Anurag Malhotra, Managing Director, Ford India), டாக்டர் ஸ்ரீபாட் பட் (Dr. Shripad Bhat, Country Director, Ford India) ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**
**நாள்: 8.11.2016**